[திரு. எம். பக்தவதசலம்] [5th November 1966

ஒரு மாத காலத்திற்கு முன்பாக மேட்டூரில் தண்ணீர் குறைவாக இருந்த நிலைக்கு இப்போது சீர்ப்பட்டுக் கொண்டு வருகிறது எப்படியும் இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: This is not a matter for an adjournment motion. So, consent is withheld.

III.—ANNOUNCEMENTS.

(1) POSTPONEMENT OF CALLING ATTENTION NOTICE.

MR. SPEAKER: Regarding the Call Attention Notice given by the hon. Member, Sri Rama. Arangannal, the Hon. Minister for Food. . . .

SRI M. KALYANASUNDARAM: Sir, I have given notice of a privilege matter.

MR. SPEAKER: That will be taken up on Monday the 7th instant.

Now the Hon. Minister for Food requests that this matter may be taken up on the 7th or 8th instant. It is therefore postponed.

IV.—CALLING ATTENTION TO RECOGNITION OF ONLY CERTAIN LANGUAGES AS MEDIA FOR U.P.S.C. EXAMINATIONS.

* திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, குஜராத்தி, மராத்தி, இந்தி, வங்காளம் ஆகிய மொழிகள் மட்டுமே அரசாங்கத் தேர்வுகள் எழுதுவதற்கேற்பத் தகுதி பெற்று வளர்ச்சியடைந்துள்ளன என்றும், தமிழ் போன்ற பிற மொழிகள் அதற்கென அந்த அளவு வளர்ச்சியடையவில்லை என்றும், மத்திய அரசு அலுவலர் தேர்வுக் கழகம் எடுத்துள்ள முடிவு, அக்கழகம் நடத்தும் தேர்வுகளைத் தங்கள் தாய்மொழியில் எழுதமுடியாத நிலைக்குத் தமிழ் மாணாக்கர்களுக்குத் தீங்கிழைத்துள்ளதும், பல்கலைக் கழக நிலையிலும், மற்ற உயர் கல்வி மட்டங்களிலும் போதுமான அளவுக்கு முன்னரே தமிழைப் பயிற்று மொழியாகச் செயல்படுத்த இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியதனாலேயே இந்த நிலை எழுந்துள்ளதென்பதும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இன்று காலைப் பத்திரிகையில் கூட, கனம் அங்கத்தினர்கள் படித்திருக்கலாம். மத்திய பார்லிமென்டில் ஒரு கேள்விக்கு விடை அளிக்கும்போது, இந்த விஷயம் யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரிசீலனையில் இருக்கிறது, எப்படிச் செய்வது என்ற சிபாரிசு இன்னும் வரவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இதிலே, முடிவாகிவிட்டது என்று பத்திரிகையிலே வந்ததை வைத்துக்கொண்டு எடுத்துக்கொள்ள வேண்டாம். கீழ்க்கண்ட விவரங்களை நான் இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன்.